ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 5.2 – தாந்தம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.2 – தாந்தம்

‡ தாம் ⋆
தம் பெருமை அறியார் ⋆
தூது வேந்தர்க்காய ⋆
வேந்தர் ஊர் போல் ⋆
காந்தள் விரல் ⋆
மென் கலை நன் மடவார் ⋆
கூந்தல் கமழும் ⋆
கூடலூரே ‖ **5.2.1** ‖

செறும் திண் ⋆
திமில் ஏறுடைய ⋆
பின்னை பெறும் தண் கோலம் ⋆
பெற்றார் ஊர் போல் ⋆
நறும் தண் தீம் ⋆
தேன் உண்ட வண்டு ⋆
குறிஞ்சி பாடும் ⋆
கூடலூரே ‖ **5.2.2** ‖

பிள்ளை உருவாய்த் ⋆
தயிர் உண்டு ⋆
அடியேன் உள்ளம் புகுந்த ⋆
ஒருவர் ஊர் போல் ⋆
கள்ள நாரை ⋆

வயலுள் ⋆
கயல் மீன் கொள்ளை கொள்ளும் ⋆
கூடலூரே ॥ **5.2.3** ॥

கூற்றேர் உருவின் ⋆
குறளாய் ⋆
நிலம் நீர் ஏற்றான் ⋆
எந்தை பெருமான் ஊர் போல் ⋆
சேற்றேர் உழுவர் ⋆
கோதைப் போதூண் ⋆
கோல் தேன் முரலும் ⋆
கூடலூரே ॥ **5.2.4** ॥

தொண்டர் பரவச் ⋆
சுடர் சென்றணவ ⋆
அண்டத்தமரும் ⋆
அடிகள் ஊர் போல் ⋆
வண்டல் அலையுள் ⋆
கெண்டை மிளிர ⋆
கொண்டல் அதிரும் ⋆
கூடலூரே ॥ **5.2.5** ॥

தக்கன் வேள்வி ⋆
தகர்த்த தலைவன் ⋆
துக்கம் துடைத்த ⋆
துணைவர் ஊர் போல் ⋆
எக்கல் இடு ⋆
நுண் மணல் மேல் ⋆

எங்கும் கொக்கின் பழம் வீழ் ⋆
கூடலூரே ॥ **5.2.6** ॥

கருந் தண் கடலும் ⋆
மலையும் உலகும் ⋆
அருந்தும் அடிகள் ⋆
அமரும் ஊர் போல் ⋆
பெருந் தண் முல்லைப் ⋆
பிள்ளை ஓடி ⋆
குருந்தம் தழுவும் ⋆
கூடலூரே ॥ **5.2.7** ॥

கலை வாழ் ⋆
பிணையோடணையும் ⋆
திருநீர் மலை வாழ் எந்தை ⋆
மருவும் ஊர் போல் ⋆
இலை தாழ் தெங்கின் ⋆
மேல் நின்று ⋆
இளநீர்க் குலை தாழ் கிடங்கின் ⋆
கூடலூரே ॥ **5.2.8** ॥

பெருகு காதல் ⋆
அடியேன் உள்ளம் ⋆
உருகப் புகுந்த ⋆
ஒருவர் ஊர் போல் ⋆
அருகு ⋆
கைதை மலர ⋆

கெண்டை குருகென்றஞ்சும் ⋆
கூடலூரே ‖ **5.2.9** ‖

‡ காவிப் பெருநீர் வண்ணன் ⋆
கண்ணன் மேவித் திகழும் ⋆
கூடலூர் மேல் ⋆
கோவைத் தமிழால் ⋆
கலியன் சொன்ன ⋆
பாவைப் பாடப் ⋆
பாவம் போமே ‖ **5.2.10** ‖

அடிவரவு — தாம் செறும் பிள்ளை கூற்றேர் தொண்டர் தக்கன் கருந்தண் கலை பெருகு காவி வென்றி

தாந்தம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்